# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ்
## பள்ளிவாயிலில் 09.12.2011 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தஷஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

அஹ்மதிய்யத்தின் எதிரிகள், ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் வாதம் புரிந்த நாள் முதல் இன்று வரை எவ்வித ஆதாரமும் இல்லாமல் தமது பிடிவாதம், தனது அறிவு, தனது சுயநலத்திற்காக ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வாதத்தை மறுக்கிறார்கள். இதற்கு எதிரில் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் ஆயிரக்கணக்கான ஆதாரங்களைத் திருக்குர்ஆனிலிருந்தும், ஹதீஸ்களிலிருந்தும், கடந்த உலமாக்கள் மற்றும் நல்லடியார்களின் கூற்றுக்களிலிருந்தும் முன்னறிவிக்கப் பட்டுள்ள மஸீஹும் மஹ்தியும் தாமே என்று நிரூபித்துக் காட்டியுள்ளார்கள். பிறகு தனது உண்மைக்கு ஆதாரமாக இறை அடையாளங்கள் தமக்கு இறங்குவதைக் காண்பித்தார்கள். அனைத்து நிலைகளிலும் தம்முடன் இறைவன் கொண்டிருந்த நடைமுறையினை விளக்கினார்கள்.

ஆனால், இறைவன் புறமிருந்து எவருடைய உள்ளத்தில் முத்திரை இடப்பட்டு விடுமோ, மேலும் எவருக்கு இறைவன் ஹிதாயத்தை நாடவில்லையோ அவர்களுக்கு எவரும் நேர்வழியினைக் காட்ட முடியாது. அவர்களின் உள்ளங்களில் உள்ள பூட்டை எவராலும் திறக்க முடியாது. ஆனால் நல்லியல்பு கொண்ட மக்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டு, அன்னாரின் பைஅத்தில் இணைந்தார்கள். அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் பைஅத் செய்வதற்கான வாய்ப்பினைப் பெற்றார்கள். அவர்களுடைய நியதியில் அல்லாஹ் ஹிதாயத்தை எழுதியிருந்தான். ஆனால் பெயர் தாங்கி உலமாக்களின் அச்சத்தினால் அல்லது அவர்களுக்குப் பின்னால் சென்றவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடைய பைஅத்தில் இணையவில்லை. இறைவனுடைய அருள் மழை பொழிந்த பிறகும் கூட, ஆன்மீக மழை பொழிந்தும் கூட, இந்த அருள் மற்றும் ஆன்மீக மழையிலிருந்து பேரிழந்தவர்களாக இருந்தனர். தற்பொழுது வரை அவ்வாறு தான் இருக்கிறார்கள். நான் கூறியதுபோன்று, இதற்கெதிரியில் அல்லாஹ் யாருக்கு ஹிதாயத்தைக் கொடுக்க விரும்புகின்றானோ மேலும் எவரிடம் நன்மை மற்றும் நல்லியல்பு இருக்கின்றதோ அவர்கள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். அன்னாரது காலத்திலிருந்து இன்று வரை ஏற்றுக் கொண்டே வருகின்றார்கள். ஏனென்றால் உலகம் குழப்பத்தில் மூழ்குவதற்கான அனைத்து அடையாளங்களும் நிறைவேறி விட்டன என்பதை அவர்கள் அறிவார்கள். உலக ஆசைகள் அதிகமாகி விட்டன. இறையச்சம் குறைந்து விட்டது. இதன் எல்லை எங்கு வரை சென்று விட்டதென்றால், பெயர்தாங்கி உலமாக்கள், அவர்களைப் பின்பற்றுபவர்கள் தனது தீய ஒழுக்கத்தின் எல்லையை அடைந்து விட்டனர். எந்த அளவுக்கென்றால் அஹ்மதிகள் மீது அநீதியிழைப்பதற்காக இறைவனது வேதமான திருக்குர்ஆன் மற்றும் அவனது ரஸுலை இழிவுபடுத்துவதிலிருந்தும் அவர்கள் தவிர்ந்திருப்பதில்லை.

மேலும் இதனை காதியானிகள் தான் செய்தார்கள் எனவும் கூறுகின்றனர். அவர்கள் திருக்குர்ஆனின் அருள் மிகுந்த பக்கங்களை தரையில் அல்லது ஒடையில் போடுவார்கள். அல்லது குப்பைகளில் போடுவார்கள். அதன் பிறகு ஓர் அஹ்மதியின் பெயரைக் கூறி இதனை அந்த அஹ்மதி தான் செய்தார் என்று கூறுவார்கள். மேலும் இங்கு என்ன நடக்கிறது? என்பது அஹ்மதிகளுக்குக் கூட தெரியாது. பின்னர் அவரைக் காவலர்கள் கைது செய்வதற்காக வரும் போதுதான் அவருக்குத் தெரிய வருகிறது. அல்லது அவருக்கு எதிராக மோசமான வார்த்தைகளைக் கூறியவாறு ஊர்வலம் செல்கிறார்கள். அல்லது பள்ளிக்கூடங்களில் உள்ள சுவர்களில், மோசமான இடங்களில், மோசமான முறையில் தமது தலைவர் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களைப் பற்றி அவர்களது கண்ணியத்திற்காக மேன்மைக்காக ஒவ்வொரு அஹ்மதியும் தனது உயிரைத் தியாகம் செய்ய எந்நேரமும் தயாராக இருக்கின்றார்கள். மேலும் தனது சந்ததிகளையும் தியாகம் செய்வதற்காக எந்நேரமும் தயாராக இருக்கின்றார்கள். பெருமானார் (ஸல்)

அவர்களுடைய பெயரை மோசமான முறையில் எழுதி, பள்ளிக்கூடத்தில் படிக்கக்கூடிய ஏதாவது ஒரு அஹ்மதி பிள்ளைகள் மீது அந்தப் பழியைப் போடுகிறனர். மேலும் இதனைக் காரணம் காட்டி அந்தப் பிள்ளைகளைப் பள்ளிக்கூடத்திலிருந்து வெளியேற்றவும் செய்கிறார்கள். அவர்கள் மீது அநீதி இழைக்கப்படுகின்றது. அவர்களை அடிக்கவும், உதைக்கவும் செய்கின்றார்கள். மாறாக ஒன்றும் அறியாத இந்தக் குழந்தைகள் மீது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இழிவுபடுத்தியதாக வழக்குகள் தொடர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்தவித வழக்குகளில் ஜாமீனும் கிடையாது. தண்டனையும் எல்லை மீறியதாகும்.

அஹ்மதி குழந்தைகள் இப்படிப்பட்ட செயல்கள் புரிந்ததாகக் கூறப்படுகிறது. ஆனால் இப்படிப்பட்டதைப் பற்றி ஒருபோதும் நம்மால் கற்பனை கூட செய்து பார்க்க முடியாது. எனவே, ஒழுக்கம் இந்த அளவுக்கு சீர்கெட்டுப் போகும்போது, இறைவனுடைய அச்சம் உள்ளத்தில் முற்றிலுமாக அகன்று போகும் போது மோசமான, இழிவான செயல்கள் எல்லை மீறும்போது, பிறகு அநீதியிழைக்கப்பட்டவர்களின் ஏக்கம், முறையீடு, மன்றாடுதல் போன்றவைகளும் தனது வேலையை வெளிப்படுத்த ஆரம்பித்து விடும்.

எனவே, குறிப்பாக இன்றைய நாட்களில் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள இதுபோன்ற நிலைமையில்தான் அஹ்மதிகள் அங்கு வாழ்ந்து வருகிறார்கள். நான் ஏற்கனவே இதனைப் பற்றி பலமுறை கூறி வந்துள்ளேன். அதாவது நமது துஆ எந்த மையப்புள்ளியை சுற்றிவர வேண்டுமென்றால், அது அஹ்மதிய்யத் அதாவது உண்மை இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக இருக்க வேண்டும்.

அல்லாஹ் மற்றும் இஸ்லாத்தின் பெயரினைக் கொண்டு அநீதியின் எல்லை மீறக்கூடியவர்களை இதன் மூலமாக அல்லாஹ் விரைவில் பிடிப்பானாக! இவர்கள் அல்லாஹ், இஸ்லாம் மற்றும் முஹம்மது ரஸுல் (ஸல்) அவர்களை இழிவுபடுத்த முயற்சி செய்கிறார்கள்.

நாம் இந்த துஆவின் பக்கமும் கவனம் செலுத்த வேண்டும். அதாவது இவர்களில் நல்லியல்பு கொண்டவர்களுக்கு அல்லாஹ் காலத்தின் இமாமிற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய ஸலாத்தை தெரிவிக்கக்கூடிய மக்களாக ஆகுவதற்கு வாய்ப்பளிப்பானாக. மேலும் M.T.A. ல் வரக்கூடிய நமது நேரலை நிகழ்ச்சிகளில் பல தொலைபேசி அழைப்பாளர்கள் பங்கு பெற்று இறை அருளால் உண்மையைப் புரிந்தவாறு பைஅத்தும் செய்கிறார்கள். எனவே முஸ்லிம்களில் பெரும்பாலார் இந்த அநீதி மற்றும் குழப்பத்தில் பங்கு கொண்டுள்ளார்கள் என்பதில்லை. ஆனால் ஒரு பெரும்பான்மை அச்சம் மற்றும் அறிவின்மையால் அஹ்மதிய்யத்தின் தூதுச் செய்தியைப் புரிந்து கொள்ள விரும்புவதில்லை. அல்லது புரிந்து கொண்டாலும் அரசாங்கச் சட்டங்கள், உலமாக்களின் அச்சத்தினால் அஹ்மதிகளுக்கு சாதாரண குடிமகனுக்குக் கொடுக்க வேண்டிய உரிமையைக் கொடுப்பதற்குக் கூட தயாராக இல்லை.

பாகிஸ்தானில் தற்போது சட்டங்களின் ராஜ்ஜியம் கிடையாது. மாறாக இன்றைய காலத்தில் முல்லாக்களின் ராஜ்ஜியமே அங்கு நடக்கிறது. முல்லாக்கள் குறைந்த அறிவுள்ள முஸ்லிம்களின் உள்ளத்தில் இந்த விஷயத்தைப் போட்டு விடுவார்கள். அதாவது அஹ்மதிகள் (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை இறுதி நபியாக ஏற்காமல் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை இறுதி நபியாக ஏற்றுக் கொண்டுள்ளார்கள். ஆனால் இது முற்றிலும் தவறாகும். ஆனால் நாமோ ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய உண்மைப் பேரன்பர் எல்லா நபிமார்களின் ஆடையில், ஏனைய எல்லா மார்க்கங்களையும் ஏற்றுக் கொள்ளக்கூடியவர்களை ஹஸ்ரத் காத்தமுல் அன்பியாவுடைய பாதத்தில் விழ வைப்பதற்காக வந்துள்ளார்கள். அவர்கள் பெருமானாரை எதிர்ப்பதற்காக வரவில்லை என்றே கூறுகின்றோம். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தன்னுடைய ஆதாரங்கள் மூலம் உலகத்தின் வாயை அடைத்து விட்டார்கள். இஸ்லாத்தின் மீது தாக்குதல் செய்யக் கூடியவர்களுக்கு எதிரில் தகர்க்க முடியாத தற்காப்பாக நின்றார்கள். அன்னார் ஆதாரங்கள் மூலம் இஸ்லாம் மற்றும் ரஸுல் (ஸல்) அவர்களின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்றால் அந்த எதிரிகள் ஓடுவதைத் தவிர வேறு வழி எதுவும் அவர்களுக்கு இல்லாமல் இருந்தது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு இல்ஹாம் இறங்கியது.**

*குல் ஜாஅல் ஹக்கு வஸஹக்கல் பாத்தில், இன்னல் பாத்தில கான ஸகூக்கா - உண்மை வந்து விட்டது; பொய் ஓடி விட்டது. நிச்சயமாக பொய்யானது ஓடிவிடக் கூடியதேயாகும்.*

*குல்லு பரக்கத்தின் மின் முஹம்மதின் அலா வஸல்லம் - எல்லா விதமான அருளும் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களிடமிருந்தேயாகும்.*

*ஃபதபாரக்க மன் அல்லத வத அல்லம - மேலும் கற்பித்தவரும், கற்றவரும் அருளுக்குரியவர் ஆவார்.*

இந்த இல்ஹாம்கள் மேலும் பார்ஸி, உருது மொழியிலும் வந்துள்ளன. இதனை கூறிய பிறகு அன்னார் தர்யாக்குல் குலூப் என்ற தமது நூலில் கூறுகின்றார்கள்:

இந்த அனைத்து இல்ஹாம்களிலும் இந்த முன்னறிவிப்பு இருந்தது. அதாவது இறைவன் எனது கையில் எனது மூலமாகவே இஸ்லாம் மார்க்கத்தின் உண்மைத்துவம், பிற மார்க்கத்தின் பொய்யையும் வெளிப்படுத்துவான். எனவே இன்று அந்த முன்னறிவிப்பும் நிறைவேறியது. ஏனென்றால் எனக்கு எதிரில் எந்த எதிரிக்கும் தனது மார்க்கத்தின் உண்மைத்துவத்தை நிரூபிக்க வலிமை கிடையாது. எனது கையிலிருந்து வானத்தின் அடையாளங்கள் வெளிப்படுகின்றன. மேலும் எனது பேனாவிலிருந்து குர்ஆனின் உண்மைத்துவம் மற்றும் ஞானங்கள் பிரகாசிக்கின்றன. எழுந்திருங்கள். அனைத்து உலகங்களிலும் தேடுங்கள். கிறித்தவத்திலிருந்து, சீக்கியர்களிடமிருந்து, யூதர்களிடமிருந்து அல்லது வேறு ஏதாவது பிரிவிலிருந்து வானத்தின் அடையாளங்களைக் காட்டுவதில், அறிவு மற்றும் ஞானங்களை எடுத்துரைப்பதில் என்னுடன் போட்டியிடுவதற்கு யாராவது இருக்கிறார்களா? நான் நம்பத்தகுந்த ஹதீஸ்களில் கூறப்பட்ட அதே நபர் ஆவேன். அதாவது இவருடைய காலத்தில் அனைத்து மதங்களும் அழிந்து போய் விடும். ஆனால் இஸ்லாம் எந்த அளவுக்குப் பிரகாசிக்கும் என்றால் இடைப்பட்ட காலக்கட்டங்களில் ஒருபோதும் இத்தகைய பிரகாசத்தைப் பெற்றிருக்காது.

எனவே இன்று உலகில் இஸ்லாத்தின் அழகிய போதனைகள் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் பரவியதை நம்மால் காண முடிகிறது. இன்று அன்னாருடைய ஜமாஅத் மட்டும் தான் கிலாஃபத்தின் நிழலின் கீழ், அமைப்பின் அடிப்படையில் முறையாக இஸ்லாத்தின் தப்லீக் பணியைச் செய்து வருகின்றது.

ஆப்பிரிக்காவில் இஸ்லாத்தின் தப்லீக் ஆக இருந்தாலும் சரி, ஐரோப்பாவில் அல்லது உலகின் மற்ற பெரிய கண்டங்களில் அல்லது எந்த நாடாக இருந்தாலும் சரி, இஸ்லாத்தின் உண்மையான வடிவத்தை அஹ்மதிய்யா ஜமாஅத் தான் வெளிப்படுத்துகின்றது.

நான் ஜமாஅத்திடம் கூறினேன். அதாவது இஸ்லாத்தின் எதிரிகள் திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தாக்குதல்கள் நடத்துகின்றார்கள். எனவே நீங்கள் திருக்குர்ஆன் கண்காட்சிகள் நடத்த வேண்டும். மேலும் அதில் திருக்குர்ஆனின் அழகிய போதனைகளை வெளிப்படுத்த வேண்டும் என்றேன். இறையருளால் பல இடங்களில் கண்காட்சிகள் நடத்தப்பட்டன. மேலும் உலகில் ஒவ்வொரு இடங்களிலும் நடத்தப்பட்டு வருகின்றன. எல்லா இடங்களிலம் இதைப்போன்ற அறிக்கைகள் தான் வருகின்றன. அதாவது வரக்கூடிய மக்கள், இதைப் பார்த்த பிறகு இவ்வாறு கூறுகின்றார்கள்.

நீங்கள் கூறுகின்ற திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் இஸ்லாம் எவ்வளவு அழகான இஸ்லாம் என்றால் எங்களுக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. மேலும் நாங்கள் இதனை எவ்வாறு மறுத்து வந்தோம். எங்களுக்கு முன்பு இஸ்லாத்தின் இத்தகைய அழகிய போதனைகள், இஸ்லாத்தின் அழகிய விஷயங்கள் வந்ததேயில்லை. இது எங்களுடைய அறிவின்மை ஆகும். பெரும்பான்மையாளர் மன்னிப்புக் கேட்டவாறு சென்றனர். மேலும், திருக்குர்ஆன் மற்றும் வேறு சில பிரசுரங்களையும் பெற்றுச் சென்றனர்.

இந்த கண்காட்சிகளில் வரக்கூடிய படித்த, சிந்தனைத்திறன் மிகுந்த முஸ்லிம்களும் வந்திருந்தனர். கிறித்தவர்களும் வந்தனர். மற்ற மார்க்கங்களைச் சேர்ந்தவர்களும் வந்தனர். இவர்கள் அனைவரும் நீங்கள் செய்யக்கூடிய இந்தப் பணி மிகப்பெரிய பணியாகும் எனப் பாராட்டினார்கள். ஆனால் துரதிஷ்டவசமாக முல்லாக்கள் சில நாடுகளில் கண்காட்சிகளை நடத்துவதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இஸ்லாமிய போதனைகளை பரப்புவதை எதிர்க்கிறார்கள். இதற்கு முன்பும் ஒருவேளை இதனை இங்கு கூறியிருக்கின்றேன்.

இந்தியாவிலுள்ள டெல்லியில் அரசாங்கத்திடமிருந்து வாடகைக்கு வாங்கப்பட்ட ஒரு பெரிய ஹாலில் நாம் திருக்குர்ஆன் கண்காட்சியை நடத்தினோம். அப்போது அங்குள்ள முல்லா தன்னுடன் சில தீயவர்களை

இணைத்துக் கொண்டு எந்த அளவு கூச்சல் போட்டார் என்றால், மூன்று நடக்கவிருந்த காண்காட்சியை இரண்டே நாட்களில் நிறுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டது. ஆனால் அந்த இரண்டு நாட்களிலும் இந்தக் கண்காட்சி தனது முழுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது. அங்கு நன்கு படித்த ஒரு நபர் இருந்தார். அவருக்கு அங்கு ஒரு தனி அந்தஸ்து உள்ளது. கண்காட்சிக்குப் பிறகு இவர் காதியான் வந்தார். அவர் கூறினார். நான் முதன்முறையாக காதியான் வந்துள்ளேன். இவ்வாறு பயணம் செய்து வந்துள்ளேன் என்றார். மேலும் நான் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்திற்கு இவ்வளவு பெரிய தொண்டு செய்யக்கூடியவர்கள் வசிக்கக்கூடிய இந்த இடத்தை பார்க்க வேண்டும் என வந்துள்ளேன் என்றார். பிறகு காதியானில் பல்வேறு இடங்களைப் பார்த்தார். நல்லதொரு தாக்கத்திற்கு ஆளானார். மேலும் நான் ஒரு விஷயத்தை வருத்தத்துடன் கூறுகின்றேன். இங்கு U.K. –வில் கடந்த நாட்களில் ஒரு நகரில் கண்காட்சியை நடத்தினார்கள். அப்போது முல்லாக்களின் கூச்சல் காரணமாக காவலர்கள் நமது ஜமாஅத்தினரிடம் கண்காட்சியை நடத்த வேண்டாம் என விண்ணப்பம் வைத்தனர். இப்படிப்பட்ட விண்ணப்பங்களை முறையாகவும் ஆதாரங்களுடனும் மறுத்து விட வேண்டும். ஆனால் அங்குள்ள உள்ளூர் ஜமாஅத் அல்லது ஜமாஅத்தின் உள்ளூர் அமைப்பாளர்கள் அவர்களது இந்த விஷயத்தை ஏற்றுக் கொண்டனர். கண்காட்சியை ரத்து செய்து விட்டனர்.

இந்த நாட்டில், இந்த ஐரோப்பிய நாடுகளில் எல்லா விதமான சுதந்திரம் இருக்கின்றபோது, மேலும் அரசாங்கம் சார்பில் எல்லாவிதமான சுதந்திரமும் அளிக்கப்படுகின்றது என அறிவிப்பு செய்யப்படுகின்ற போது, ஒருவேளை நாம் இந்த முல்லாவை தலைக்கு மேல் உட்கார வைத்தோம் என்றால், பிறகு இந்த நாட்டிலும் தீவிரவாதத்தை வளர்க்கக்கூடிய மக்களாக நாம் ஆகி விடுவோம். இந்த விஷயத்தை நாம் அமைப்பாளர்களிடமும் நல்ல முறையில் புரிய வைக்க வேண்டும். இந்தக் கண்காட்சியை மீண்டும் நடத்த வேண்டும். சிலர் இதனை அமைதியாக நடத்தி முடிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். அமைதியான முறையில் நடத்த வேண்டும் என்றால் பிறகு என்ன பலன் இதில் இருக்கின்றது? ஒருபுறம் இறைவனுடைய பயில்வானின் மிஷனை மேம்படுத்த வேண்டும் என்பது நமது வாதமாகும். மறுபுறம் கோழைத்தனத்தை வெளிப்படுத்துவது என்பது சரியானதாகாது.

இந்த நாட்டில் நான் கூறியதுபோன்று சட்டம்தான் ராஜ்ஜியம் நடத்துகின்றது. மேலும் அரசாங்க சட்டம்தான் செயல்படுகின்றது என வாதம் புரிகிறது. பிறகு சட்டத்திடம் கூறுங்கள். உங்களுடைய வேலை இதனை செயல்படுத்துவதாகும். ஒவ்வொரு குடிமகனுடைய உரிமையைக் கொடுக்க வேண்டும்; முழுமையாகக் கொடுக்க வேண்டும். எனவே இதனைச் செய்யுங்கள். எவ்வாறிருப்பினும், இதுதான் முல்லாக்களின் நிலைமையாகும். முஸ்லிம் நாடு அல்லாத பிற நாடுகளில் அதாவது இந்தியா அல்லது U.K.–ல் திருக்குர்ஆன் மற்றும் இஸ்லாத்தின் போதனைகளைப் பரப்புவதற்கான முயற்சி மேற்கொள்ளப்படும்போது, முஸ்லிம் அல்லாதவர்கள் அல்ல; மாறாக இந்த பெயர் தாங்கி உலமாக்கள் எழுந்து நிற்கின்றார்கள். இது எவ்வளவு மோசமான ஒரு செயல் என்றால், திருக்குர்ஆனின் அழகிய போதனையைப் பரப்பக்கூடிய பணியை அஹ்மதிகள் செய்கின்றார்களா? இதனை எங்களால் ஒருபோதும் பொறுத்துக் கொள்ள முடியாது என்று கூறுகின்றார்கள். இதுதான் இஸ்லாத்தினை குத்தகைக்கு எடுத்தவர்களின் உண்மையான படம் மற்றும் எண்ணம் ஆகும்.

ஆனால் நாம் நமது வேலையைச் செய்து கொண்டிருக்க வேண்டும். நாம் எந்நிலையிலும் இஸ்லாத்தின் எதிரிகளின் வாயை அடைக்க வேண்டும். மேலும் திருக்குர்ஆனுடைய போதனையை உலகத்தில் பரப்ப வேண்டும். நாம் இதனை செய்து கொண்டே செல்வோம் (இன்ஷா அல்லாஹ்) என்பது வெளிப்படையான ஒன்றாகும். இதன் மூலம் உலகத்தை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் பாதத்தின் கீழ் கொண்டு வருவதற்கு முயற்சி செய்ய வேண்டும். நான் கூறியது போன்று மேற்கத்திய நாடுகளின் சிறப்பம்சம் என்னவென்றால், சட்டத்தின் பார்வையில் அனைவரும் ஒன்றாகவே கருதப்படுவர். எனவே யாராவது நமது பணியில் ஏதாவது தடையை ஏற்படுத்தினால் சட்டத்தின் உதவியைப் பெற வேண்டும். இங்கு, நான் இவர்களது சட்டத்தின் மேன்மையின் ஓர் உதாரணத்தையும் எடுத்துரைக்கின்றேன்.

கடந்த நாட்களில் நான் ஐரோப்பிய சுற்றுப்பயணத்தின்போது, திரும்பி வரும் சமயத்தில் ஒரு ஜ்முஆ ஹாலந்தில் நிகழ்த்தினேன். அங்கு நான் அங்குள்ள அரசியல்வாதி, பராளுமன்ற உறுப்பினர், ஒரு

பாராளுமன்ற தலைவரான கிரேட் வில்டர்ஸ் என்பவருக்கு எனது குத்பாவில் இந்த ஒரு தூதுச் செய்தியைக் கூறினேன். அதாவது, நீங்கள் இஸ்லாத்திற்கு எதிராகவும், ஹஸ்ரத் ரஸுல் (ஸல்) அவர்களுக்கு எதிராகவும் அநியாயத்தில் வரம்பு மீறியுள்ளீர்கள். மோசமான வார்த்தைகளைப் பேசுகின்றீர்கள். எதிர்ப்பின் எல்லையை அடைந்துள்ளீர்கள். இதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். சத்தமில்லாமல் இருக்கின்ற இறைவனது தடிக்கு அஞ்சுங்கள். இல்லையென்றால், அது தனது நேரத்தில் உங்களைப் போன்றவர்களை அழித்துவிடும். அந்த இறைவன் உங்களைப் போன்றவர்களை அழிப்பதற்குரிய ஆற்றல் உள்ளவன் ஆவான். மேலும் நான் இதனையும் கூறினேன். எங்களிடம் எந்த விதமான ஆற்றலும் இல்லை. நாங்கள் துஆ மூலமாக உங்களை எதிர்ப்போம். இந்த குத்பாவின் சராம்சத்தைக் கொண்ட பத்திரிகை வெளியீட்டிற்கான பதிப்பை நமது அச்சகப் பிரிவின் இன்சார்ஜ் தயார் செய்து என்னிடம் கொண்டு வந்தார். அப்போது அதில் மற்ற எல்லா விஷயங்களையும் எழுதியிருந்தார். ஆனால் இந்த வரிகள் அதில் எழுதப்படவில்லை. அப்போது நான் இதனை அவர்களிடம் கூறினேன். இந்த வரிகளையும் கண்டிப்பாக எழுதுங்கள். நம்மிடம் உலக ஆயுதம் எதுவுமில்லை என்று கூறினேன். மேலும் நாங்கள் துஆ செய்கின்றோம்; நீங்களும் உங்களைப் போன்றவர்களும் அழிந்துபோக வேண்டும். உண்மை என்னவென்றால், நமது அனைத்து எதிரிகளுடனும், பகைவர்களுடனும் நமது போட்டி ஆதாரங்களுடனும் அல்லது அதனைவிட அதிகமாக துஆவுடனும் செய்யப்படுகிறது.

எவ்வாறிருப்பினும், இந்த அச்சக வெளியீட்டினை கிரேட் வில்டர்ஸ் என்ற அரசியல்வாதியும் படித்தார். மேலும் அவர் தனது அரசாங்கத்திற்கு கடிதம் எழுதினார். மேலும் அவர் அரசாங்கத்திடம் அதாவது உள்துறை அமைச்சரிடம் சில கேள்விகளைக் கேட்டார். இந்த விஷயம் அங்குள்ள அச்சகத்திலும் வந்தது. அங்குள்ள ஜமாஅத்தினர் எனக்கு கடிதம் எழுதினார்கள். இவ்வாறு அவர் சில கேள்விகளைக் கேட்டிருக்கின்றார். இதன் காரணமாக ஜமாஅத் சகோதரர்களிடம் ஒரு விதமான பதற்றம் நிலவுகின்றது என்றார். அப்போது நான் அவர்களிடம் கூறினேன். உள்துறை அலுவலகம் கேட்டால் பயப்பட வேண்டிய அவசியம் ஒன்றுமில்லை; கவலைப்படவும் வேண்டாம். தெளிவாக நமது கொள்கைகளைக் கூறுங்கள். அடிப்படையில் அந்த மனிதர்தான் பிரச்சனையை ஆரம்பித்தார். அவர் தவறான செயல்களை செய்கிறார். ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைக் குறித்து தவறான ஃபிலிம்களை, படங்களை உருவாக்கினார். மிகவும் மோசமான வார்த்தைகளை உபயோகப்படுத்தினார். இஸ்லாத்தை இழிவுபடுத்தினார். நாங்கள் அதற்கு பதில்தான் கொடுத்தோம். மேலும் இதனைத்தான் கூறியுள்ளோம். இறைவன் தனது நபியின் தன்மானத்தைப் பாதுகாக்கக் கூடியவன் ஆவான். அவன் பிடித்து விடுவான். அவனுக்கு அஞ்ச வேண்டாம்.

எவ்வாறிருப்பினும், அவர் தனது அரசாங்கத்திற்கு எழுதிய கேள்விகளுக்கு அவரது அரசாங்கம் பதிலளித்தது. சில நாட்களில் இந்த விஷயம் அங்குள்ள பத்திரிகைகளிலும் வந்து விட்டது. அவர் கேட்ட முதல் கேள்வி? உலக முஸ்லிம் தலைவர் டச்சு நாட்டு அரசியல்வாதி கிரேட் வில்டர்ஸ் –க்கு அனுப்புகின்ற எச்சரிக்கை! என்ற கட்டுரையைப் பற்றி உள்துறை அமைச்சராகிய உங்களுக்கு தெரியுமா? அதற்கு உள்துறை அமைச்சர், ஆம்! இந்த கட்டுரையை நன் படித்தேன் என்றார்.

அவரது அடுத்த கேள்வி? மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது இவ்வாறு கூறினார். கேளுங்கள். நீங்களும், உங்களது அமைப்பும், உங்களைப் போன்ற ஒவ்வொருவரும் இறுதியில் அழிந்து போய் விடுவீர்கள். இது வில்டர்ஸ் உள்துறை அமைச்சருக்கு எழுதியதாகும். தொடர்ந்து எழுதுகின்றார்: இந்தக் குழப்பம் நிறைந்த கூற்றின் மீது, இந்த இஸ்லாம் அமைப்பின் மீது உள்துறை அலுவலகம் என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது? டச்சு உள்துறை அமைச்சர் இதற்குப் பதில் கூறினார்:

அச்சக வெளியீட்டின் அடிப்படையில் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது இவ்வாறு தான் கூறியுள்ளார். அதாவது, இப்படிப்பட்ட நபர்கள், எந்த விதமான குழப்பம், சண்டை சச்சரவு மூலமாக அழியமாட்டார்கள். மாறாக துஆவின் மூலமாக அழிந்து போவார்கள். இந்தக் கூற்றில் நான் குழப்பத்தை விளைவிக்கக்கூடிய எந்த விஷயத்தையும் பார்க்கவில்லை. அல்லது குழப்பம் ஏற்படுத்தக் காரணமாக இருக்கக்கூடிய விஷயங்களும் அதில் இல்லை. எனவே நான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு எதிராக நடவடிக்கை எடுக்க எந்தக் காரணமும் இல்லை என்பதாகும்.

அவர் கேட்ட மூன்றாவது கேள்வி? ஹாலந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கு உலகளாவிய முஸ்லிம் ஜமாஅத் மற்றும் மஸ்ரூர் அஹ்மதுடன் என்ன தொடர்பு இருக்கின்றது? என்பதாகும்.

அதில் அந்த டச்சு அமைச்சர் கூறினார்: ஹாலந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஒரு பகுதியாகும். இதுதான் அவரது பதில் ஆகும். இதுதான் இந்த மக்களின் நேர்மையாகும். ஒரு அரசியல்வாதி, அவர் தனது அமைப்புடைய தலைவராவார். மற்றும் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார். அவர் அதே மார்க்கத்தைச் சேர்ந்தவராவார். இவ்வாறிருந்தும் கேள்வி கேட்கும் போது நேர்மையுடன் அதற்கு பதில் தரப்பட்டது. வில்டர் சாஹிப் தற்போது ஜமாஅத்திற்கு எதிராக மேலும் என்ன விஷயங்களைப் பெற முடியும் என்பதைப் பற்றி ஆய்வு செய்து வருகிறார் என நான் கேள்விப்பட்டேன். எதிரிகள் எந்த அளவு முடியுமோ முயற்சி செய்யட்டும். இது இறை ஜமாஅத்தாகும். எப்பொழுதும் உண்மை மற்றும் சத்தியமான விஷயங்களை மட்டும்தான் இது கூறிவரும். இவை அனைத்தும் தான் இவர்களுக்கு இதில் தென்படும்.

எனவே நமக்கு இக்காலத்தின் இமாம் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகத்தின் எல்லை வரை எட்ட வைக்க வேண்டிய, எதிரிகளின் வாயை ஆதாரங்கள் மூலம் அடைக்க வேண்டிய பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்துள்ளார்கள். மேலும் தத்தமது வசதிக்கேற்ப, முயற்சிக்கேற்ப ஒவ்வொரு அஹ்மதியும் இந்தப் பொறுப்பை நிறைவேற்றி வருகிறார்கள்.

மேலும் எங்காவது இஸ்லாத்தின் எதிரிகள் இஸ்லாத்தின் மீது தாக்குதல் நடத்துவதைக் கண்டால், அங்கு அஹ்மதிதான் அதனைத் தடுக்கின்றார். மேலும் வாயை அடைக்கக் கூடிய பதிலும் தருவர். மேலும் உலகத்திற்கு அதனைப் புரிய வைப்பர். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மூலம் கிடைக்கப்பெற்ற அறிவு மற்றும் ஞானமும் ஆகும். இதனைத் தான் நாம் பயன்படுத்துகின்றோம். இதனால் ஒவ்வொரு அஹ்மதியும் எவ்வித தாழ்வு மனப்பான்மையும் இல்லாமல் பெரிய பெரிய தலைவர்களுக்கும், மார்க்கத் தலைவர்களுக்கும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியினை எட்ட வைக்கின்றனர். மற்றவர்கள் இதுபோன்ற தலைவர்களிடம் சென்றால் அவர்களிடம் உதவி வேண்டுவதற்காகவே செல்கின்றார்கள். அல்லது உலகப் பலனைப் பெறுவதற்காக செல்கின்றனர். இவர்கள் ஒருபோதும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியினை எட்ட வைப்பதற்கான துணிவை மேற்கொள்வதில்லை.

கடந்த நாட்களில் நமது கபாபீர் உடைய அமீர் சாஹிபிற்கு ஒரு குழுவின் மூலம் இத்தாலி செல்வதற்கான வாய்ப்பு கிடைத்தது. செல்வதற்கு முன்பு அவர் என்னிடம் இதனைக் கூறினார். அதாவது ஒரு குழு செல்கிறது. இதில் அனைத்து மார்க்கத்தைச் சார்ந்தவர்களும் உள்ளனர். இது மார்க்கக் கூட்டம் ஆகும். இது எப்படிப்பட்ட கூட்டம் என்றால் இதில் போப் உடன் சந்திப்பு நடைபெறும். மேலும் நாங்கள் போப்பின் அழைப்பின் பேரில்தான் அங்கு செல்கிறோம் என்றார். எனவே தாங்கள் சிறந்ததாகக் கருதினால் தங்களின் சார்பாக ஏதாவது தூதுச் செய்தியைக் கொடுக்கின்றேன். மேலும் திருக்குர்ஆனை அன்பளிப்பாகவும் வழங்குகின்றேன் என்றார். இது மிகவும் நல்ல விஷயம் ஆகும்; கண்டிப்பாக கொடுங்கள் என்று நான் கூறினேன். இதனால் நான் எனது தூதுச் செய்தியை எழுதி அனுப்பினேன். அதனை போப் இடம் கொடுக்கும்படியும் கூறினேன். அதனை அவர்கள் பல நகல்கள் எடுத்தார். மேலும் அங்கு சென்ற பிறகு போப்பிற்கும் அதனை வழங்கினார்கள். மேலும் அங்கு வந்திருந்த வாட்டிகனில் உள்ள பெரிய பெரிய பாதிரிமார்களுக்கும் கொடுத்தனர். திருக்குர்ஆனை அன்பளிப்பாக போப்பிற்கு வழங்கினார்கள். மேலும் அதன் புகைப்படம் பத்திரிகைகளிலும் வந்தன.

இதற்குப் பிறகு ஷரீஃப் ஒதே சாஹிப் எழுதிய ரிப்போர்ட்டின் ஒரு பகுதியை உங்களுக்கு கூறுகின்றேன். அவர் எழுதுகின்றார்:

நான் இத்தாலியில் போப் வசிக்கும் வாட்டிகனில் 10.11.2011 ம் தேதி போப் அவர்களை மார்க்க அறிஞர்களின் குழுவுடன் சேர்த்து சந்தித்தேன். இஸ்ரேலுடைய ஆஃகமே அஃஸம் என்பவர் அவர்களின் மிகப்பெரிய ருபாயி ஆவார். மேலும் கிறிஸ்தவர்கள், ஒரு சில யூதர்கள் மற்றும் முஸ்லிம் பொறுப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

அவர் எழுதுகின்றார்: நான் போப்பிடம் ஹுஸூருடைய கடிதத்தைக் கொடுத்தேன். மேலும் இதில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய இமாம் அவர்களின் முக்கியமான தூதுச் செய்தி உள்ளது என்று கூறினேன். அவர் இந்தக் கடிதத்தை தனது கையினால் பெற்றுக் கொண்டார். மேலும் நான் இத்தாலி மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட திருக்குர்ஆனை அன்பளிப்பாக வழங்கினேன். இத்தாலி மற்றும் இஸ்ரேல் டி.வி. சேனல்களும், இத்தாலி நாளிதழ்களும், இஸ்ரேலின் அரபி, இப்ரானி பத்திரிகைகளும் என்னுடைய புகைப்படத்தை போப்புடன் வெளியிட்டது. சந்திப்பிற்குப் பிறகு வாட்டிகனில் ஒரு பிரஸ் கான்ஃபரன்ஸும் இருந்தது. இதில் நான் ஹுஸூருடைய கடிதத்தைப் பற்றி கூறினேன். மேலும் இதன் சாராம்சத்தை எடுத்துரைத்தேன். பத்திரிகையாளர்களுக்கு இதன் நகல்கள் கொடுக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து வாட்டிகனில் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள சர்ச்சின் பொறுப்பாளர் கார்டினல் போன்றோருக்கும் இதன் நகலைக் கொடுத்தேன். மேலும் நான் இங்கு மார்க்கங்களுக்கு இடையில் நடைபெற்ற கலந்துரையாடல் கமிட்டியைச் சந்தித்தேன். மேலும் அவர்கள் என்னை தனது கலந்துரையாடலில் அழைப்பதற்காக என்னிடம் முகவரியை வாங்கிக் கொண்டார்கள். இவர்களுடைய கலந்துரையாடல் அடுத்த ஆண்டு சிரோலியோனில் நடைபெறும்.

நான் போப்பிற்கு எழுதிய கடிதத்தின் சாராம்சம் இதுவாகும். ஆரம்பத்தில் சில துஆ சம்பந்தப்பட்ட வாக்கியங்கள் இருந்தது. பிறகு திருக்குர்ஆனின் வசனம் இருந்தது.

*நீர் கூறுவீராக! வேதத்தையுடையவர்களே! எங்களுக்கும் உங்களுக்குமிடையில் ஒன்றுபட்ட கருத்தின்பால் வாருங்கள். (அதாவது) நாம் அல்லாஹ்வையன்றி வேறெவரையும் வணங்கமாட்டோம்; அவனுக்கு வேறெதனையும் இணை வைக்க மாட்டோம்; அல்லாஹ்வை விட்டு விட்டு நம்முள் சிலர், வேறு சிலரை கடவுள்களாக ஆக்கிக் கொள்ளமாட்டோம். ஆனால் அவர்கள் புறக்கணித்து விட்டால், நீங்கள் அவர்களிடம், நாங்கள் (இறைவனுக்குக்) கட்டுப்பட்டு நடப்பவர்களாயிருக்கின்றோம் என்பதற்கு நீங்கள் சாட்சிகளாயிருங்கள் என்று கூறுங்கள். (3:65)*

நான் அதன் சராம்சத்தைக் கூறுகின்றேன். இன்றைய காலத்தில் இஸ்லாம், சில முஸ்லிம்களின் செயல்களின் காரணமாக முக்கியச் செய்திகளில் இடம் பெறுகிறது. மேலும் அதன் போதனைகள் ஆட்சேபனைக்கு இலக்காகி உள்ளன. ஆனால் எந்த காரணத்திற்காக ஆட்சேபனைக்கு இலக்காக்கப்படுகின்றதோ அது தவறாகும். மேலும் ஒரு சில முஸ்லிம்களின் செயல்களினால் படித்தவர்களும், இஸ்லாம் மற்றும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதிலிருந்து விலகவில்லை. ஒவ்வொரு மதத்தின் தோற்றுனருடைய போதனையும் அல்லது ஒவ்வொரு மதத்தின் போதனையின் நோக்கமும் அடியானை இறைவனுடன் இணைப்பதாகும். இதனைப் போன்றே இஸ்லாத்தின் போதனையும் அதனை விட மேம்பட்டதும் ஆகும்.

எனவே சில மக்களின் தீய நடவடிக்கையின் காரணமாக இஸ்லாத்தின் மீது தவறான தாக்குதல் நடத்தக் கூடாது. இஸ்லாம் நமக்கு அனைத்து நபிமார்களுக்கும் கண்ணியம் அளிக்க வேண்டும் என போதிக்கின்றது. இந்த நபிமார்களைப் பற்றி பைபிளிலும் உள்ளது. திருக்குர்ஆனிலும் உள்ளது. நாங்கள் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்களது அடியார்கள் ஆவோம். எங்களுடைய நபி (ஸல்) அவர்களின் கண்ணியத்தின் மீது தாக்குதல்கள் நடத்தப்படும்போது எங்களுக்கு மிகவும் வேதனை அளிக்கிறது. நாங்கள் இந்தத் தாக்குதல்களுக்கு பதில் கொடுக்கின்றோம். எவ்வாறென்றால் பெருமானார் (ஸல்) அவர்களுடைய அழகிய போதனைளை வெளிப்படுத்தியவாறு இந்த தாக்குதல்களுக்கு பதில் கொடுக்கின்றோம். திருக்குர்ஆனின் போதனைகளாகிய அன்பு, நேசம், சகோதரத்துவம் போன்றவற்றை உலகத்தின் முன்பு வைத்து, பதில் கொடுக்கின்றோம். மேலும் இஸ்லாத்தின் அடிப்படை விஷயம் என்னவென்றால், தக்வாவின் மீது செல்வதாகும். மேலும் இந்த விஷயத்தை பரப்புவதற்கான எங்களுடைய பள்ளிவாசல்களிலிருந்து ஐந்து நேரமும் ஒலி எழுப்பப்படுகிறது. இதில் அல்லாஹ்வின் மேன்மை எடுத்துரைக்கப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் ரஸூல் ஆவார்கள் என அறிவிப்பு செய்யப்படுகிறது.

பிறகு மேலும் நான் எழுதியிருந்தேன். அதாவது இன்று உலகில் அமைதியின்மை ஏற்படக் காரணம் பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம் என்ற பெயரில் ஒருவர் மற்றவரின் கண்ணியத்தின் மீது விளையாடுவதே

ஆகும். மேலும் மதங்கள் சார்பாகவும் கஷ்டங்கள் கொடுக்கப்பட்டு வருகின்றன. இன்றைய காலத்தில் உலகில் சிறிய அளவில் போர்கள் தொடங்கி விட்டன. இன்று உலகத்திற்கு இதனை முடிப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். இல்லையென்றால் உலகப்போர் உருவாகக்கூடிய நிலை ஏற்படலாம். இதன் அழிவு எடுத்துக் கூற முடியாத அளவிற்கு இருக்கும்.

பிறகு நான் எழுதினேன். எனவே நாம் உலகத்தின் பௌதீக முன்னேற்றத்தின் பக்கம் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக இதனை அழிவிலிருந்து பாதுகாப்பதற்காக அதிக கவனம் செலுத்த வேண்டிய அவசியம் உள்ளது. இல்லையென்றால், அழிவு நிச்சயமானதாகும். மார்க்க அறிவுகள், தமக்கிடையிலுள்ள எதிர்ப்புகள், உரிமைகளைப் பறிப்பதிலிருந்து உலகத்தைப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் நான் எழுதினேன்: தாங்கள் உலகில் ஓர் அந்தஸ்தைப் பெற்றுள்ளீர்கள். உங்களைப் பின்பற்றக்கூடியவர்கள் பலர் உள்ளனர். எனவே இந்தப் பணியைச் செய்வதற்கு முயற்சி செய்யுங்கள். உலகிலுள்ள எல்லா மார்க்கங்களும் இன்று தமக்கிடையில் உதவி புரிந்தவாறு அமைதியை ஏற்படுத்த முயற்சி செய்ய வேண்டும். இதன் மூலம் தன்னைப் படைத்த ஓர் இறைவனை கண்டறிவதன் பக்கம் கவனம் செலுத்த வேண்டும்.

எனவே இதுதான் அவருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் சாராம்சம் ஆகும். அல்லாஹ் இந்தத் தூதுச் செய்தியை அவருக்குப் புரியும்படி ஆக்குவானாக! அவர் இதனைப் படித்திருப்பார். இவர்கள் மனித குலத்தின் கண்ணியத்தினை நிலைநாட்டியவர்களாக ஆகட்டுமாக! மார்க்கத்திற்கு கண்ணியம் அளிக்கக் கூடியவர்களாக ஆகட்டுமாக! மேலும் அனைத்தையும் விட மிக முக்கியமாக ஓர் இறைவனை கண்டறியக்கூடிய மக்களாக ஆகட்டுமாக!

ஷரீஃப் சாஹிபின் ரிப்போர்ட்டிலிருந்து அந்த சமயத்தில் அங்கு மேலும் பல மதங்களின் தலைவர்களும், பல பெரியவர்களும் இருந்தனர் என்பது புலனாகிறது. ஆனால் போப்பிற்கு இஸ்லாத்தின், திருக்குர்ஆனின் தூதுச் செய்தியினை எட்ட வைப்பதற்கான வாய்ப்பு காலத்தின் இமாம் மற்றும் அல்லாஹ்வுடைய வீரராகிய ஓர் அடியாருக்கு கிடைத்திருக்கின்றது. அஹ்மதிகள் முஸ்லிம்கள் அல்லர் என இந்த மக்கள் கூறுகின்றார்கள். (நவூதுபில்லாஹ்) ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மற்றும் திருக்குர்ஆனை இழிவுபடுத்தக் கூடியவர்கள் ஆவார்கள் என்று நம்மைக் கூறுகின்றனர்.

ஆனால் நாம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் இணைந்து இஸ்லாத்தின் வெற்றியின் காட்சிகளை இன்று வரை புதுப்பொலிவுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். மாறாக எதிரிகளில் எவர்களுடைய உள்ளத்தில் போட்டி, பொறாமை இல்லையோ அவர்களும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தமது பணியில் உறுதியாக நின்று அதில் அவர்கள் தமது நோக்கத்தை அடைந்து விட்டார்கள் என்பதை ஒப்புக் கொள்கின்றனர்.

ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுக்கு எதிராக ஒரு வழக்கு தொடரப்பட்டது. இது மிகவும் பிரபல்யமான வழக்காகும். இந்த வழக்கை ஒரு பாதிரி ஹென்றி மார்ட்டின் கிளார்க் தொடர்ந்தார். உண்மையில் இதற்குப் பின்னணியில் இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு மத்தியில் நடைபெற்ற ஒரு விவாதத்தில் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட தோல்விக்குப் பழிவாங்குவதற்காகவே ஆகும். இந்த விவாதத்தின் விளக்கம் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் நூலான ஜங்கே முகத்தஸில் இடம் பெற்றுள்ளது.

இந்த வழக்கு மார்ட்டின் கிளார்க் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மீது கொலை சம்பந்தமாக ஏற்பட்ட பொய் வழக்கு ஆகும். இதன் விளக்கம் அன்னாருடைய நூல் கிதாபுல் பரிய்யாவில் மிகவும் விரிவாக இடம் பெற்றுள்ளது. எவ்வாறிருப்பினும், இந்த வழக்கில் அப்போதைய நீதிபதி கேப்டன் டக்லஸ் மிகவும் மரியாதையுடன் அன்னாரை விடுதலை செய்தார். அன்னார் அந்த நீதிபதிக்கு பிலாத்துல் சானி அதாவது இரண்டாவது பிலாத்து எனப் பட்டம் கொடுத்தார்கள். இதுவும் ஒரு மிகப்பெரிய விளக்கம் கொண்டதாகும். டாக்டர் ஹென்றி மார்ட்டின் கிளார்க் அந்த வழக்கில் மிகவும் இழிவடைந்தார். மேலும் நீதிபதி ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களிடம் நீங்கள் இவருக்கு எதிராக வழக்கு தொடரலாம் என்றார்.

கடந்த நாட்களில் M.T.A. உடைய ஆஸிப் சாஹிப் அவர்களுக்கு ஹென்றி மார்ட்டின் கிளார்க் உடைய கொள்ளுப் பேரனுடன் தொடர்பு கிடைத்துள்ளது என்று என்னிடம் கூறினார். மேலும் அவர் என்னை சந்திக்க விரும்புகின்றார் என்றும் கூறினார். பிறகு மிகவும் நல்ல விஷயம் என்று நான் கூறினேன். ஏதாவது ஒரு நாள் அழைத்து வரட்டும் என்றேன். இதன் மூலம் அவர் கடந்த நாட்களில் என்னைச் சந்தித்தார். மக்கள் என்னைச் சந்திக்க வந்து கொண்டுதான் இருப்பார்கள். ஆனால் அவர் என்னுடன் பேசிய சில விஷயங்களை நான் உங்கள் முன்பு வைக்கின்றேன். இது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களின் உண்மைத்துவத்திற்கு ஒரு சான்றாகும். இன்றும் அல்லாஹ் அன்னாருக்கு எந்த அளவுக்கு உதவிபுரிகின்றான் என்பதற்கும் ஒரு சான்றாகும். நான் பேசிக் கொண்டிருக்கும் போது ஜங்கே முகத்தஸ் நூலைப் பற்றி பேசினேன். அவர் கூறினார். நான் அதனைப் பற்றி தற்போதுதான் ஆராய்ந்து கொண்டிருக்கின்றேன். ஆனால் என்னால் ஓரளவு புரிய முடிவது என்னவென்றால், ஹென்றி மார்ட்டின் கிளார்க் கடந்த காலத்தோடு தொலைந்து விட்டார். இது ஹென்றி மார்ட்டிக் கிளார்க்கின் கொள்ளுப்பேரனின் கூற்றாகும். அவருக்கு எதிராக நின்ற அந்த மனிதர் அதாவது ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் உலகம் முழுவதும் வெற்றி அடைந்து விட்டார்கள். அவர் கூறினார்: சில வருடங்களுக்கு முன்பு வரை என்னுடைய பாட்டனார் யார் என்பதைப் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. தற்போது சில நாட்களுக்கு முன்பு எனது மூதாதையர்கள் யார் எனத் தேடும்போதுதான் ஹென்றி மார்ட்டின் கிளார்க் தான் எனது பாட்டனார் என்பது எனக்கு தெரிய வந்தது. எவ்வாறிருந்த போதிலும் எங்களது பேச்சுவார்த்தை அரை மணி நேரம் வரை நடைபெற்றது. மிகவும் தாழ்ந்த குரலில் மிகவும் கவனத்துடன் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்.

நான் இது அவரது நடைமுறை என நினைத்தேன். ஆனால் பிறகு ஆஸிப் சாஹிபிடம் அவர், நான் பேச்சுவார்த்தையின் போது முற்றிலும் உணர்ச்சிவசப்பட்டவனாக இருந்தேன் என்று கூறியுள்ளார். மேலும் ஆஸிப் சாஹிப் அவரிடம் கூறினார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் மார்ட்டின் கிளார்க் பற்றி மிகவும் கடினமான வார்த்தைகளை உபயோகித்து உள்ளார்கள் எனில் அதற்குக் காரணம் மார்ட்டின் கிளார்க் உடைய பிடிவாதம் ஆகும். மேலும் அது அந்த விஷயத்தின் நிலைமையின் காரணமாக ஏற்பட்டதாகும். ஆனால் அந்த விவாதத்தை முழுமையாகப் படித்து மனிதனால் புரிந்து கொள்ள முடிவதென்றால் இஸ்லாம் தான் வெற்றி பெற்றது. ஆனால் அவர் கிறிஸ்தவம் தான் வெற்றி பெற்றது என்று கூச்சலிட்டு வற்புறுத்தி வந்தார். அதன் பிறகு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் துஆவின் மூலம் முடிவை தெரிந்து கொள்வோம் என்றார்கள். இதன் மூலம் அல்லாஹ் வெளிப்படையான அடையாளங்களைக் காண்பிக்கட்டும் என்றார்கள். இதனை ஆஸிப் சாஹிப் கூறியதும் அந்தக் கொள்ளுப்பேரன் கூறினார். God has certainly shown a sign even today. இறைவன் இன்றும் கூட ஓர் அடையாளத்தைக் காட்டியுள்ளான். அல்லாஹ் உண்மையில் தனது அடையாளத்தை வெளிப்படுத்தி விட்டான். மேலும் இன்றும் தனது அடையாளத்தை வெளிப்படுத்தி இருக்கிறான்.

பிறகு சந்திப்பைப் பற்றி நல்ல முறையில் எடுத்துரைத்தார். அதனை ஆஸிப் சாஹிபிடம் இதன் விளக்கத்தை கட்டுரையாக எழுதுமாறு கூறியிருக்கின்றேன்.

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது உண்மைத்துவத்தை இன்று இந்த இஸ்லாத்தின் எதிரிகளின் சந்ததிகளின் வாயின் மூலமாகவே அல்லாஹ் வெளிப்படுத்துகின்றான். மார்க்கக் குத்தகைக்காரர்களாக விளங்கும் இந்த முல்லாக்களுக்குதான் இந்த விஷயம் புரிவதில்லை.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

என்னை நிராகரிப்பது என்னை நிராகரிப்பதாகாது. மாறாக, இது அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் ரஸூல் (ஸல்) அவர்களை நிராகரிப்பதாகும். ஏனெனில் எவர் என்னை மறுக்கின்றாரோ அவர் என்னை மறுப்பதற்கு முன்பு அல்லாஹ்வை மறுப்பவர் ஆவார்.

அவர்களது சிந்தனை என்னவென்றால், தற்போது அகம் மற்றும் புறக் குழப்பங்கள் எல்லை மீறி விட்டன.

*இந்த (குர்ஆனாகிய) அறிவுரையை நாம் இறக்கினோம். நிச்சயமாக நாமே இதனைப் பாதுகாப்போம். (15:10)*

என்று இறைவன் வாக்குறுதி வழங்கிய பிறகும் கூட, இவர்களது சீர்திருத்தத்திற்காக எந்தவித ஏற்பாட்டையும் செய்யவில்லை. அவர்கள் இந்த செயல் மீது வெளிப்படையாக ஈமான் கொள்கிறார்கள்.

இறைவன் இஸ்திக்லாப் வசனத்தில் வாக்குறுதி வழங்கியுள்ளான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் தொடர் போல் இந்த முஹம்மதியத் தொடரிலும் கலீஃபாக்களுடைய தொடர்பை ஏற்படுத்துவான். ஆனால் அவன் இந்த வாக்குறுதியை நிறைவேற்றவில்லை என்றால், தற்போது எந்தவொரு கலீஃபாவும் இந்த உம்மத்தில் இல்லை என்றால் திருக்குர்ஆனில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை முஸாவுடைய ஒப்புமை என கூறியிருப்பதை நாம் மறுக்க வேண்டியது வரும். ஏனென்றால் இந்தத் தொடரில் முழுமையான ஒப்புமை ஏற்பட எவ்வாறு ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுடைய தொடரில் 14 ஆம் நூற்றாண்டில் ஒரு மஸீஹ் வந்தாரோ அவ்வாறே இந்த 14 ஆம் நூற்றாண்டிலும் இந்த உம்மத்திலிருந்தே ஒரு நபி பிறக்க வேண்டியிருந்தது.

இதேபோன்று திருக்குர்ஆனுடைய ஆகரீன மின்ஹூம் லம்மா யல்ஹகூபிஹிம் என்ற வசனம் மஸீஹ் வருவதை முன்னறிவிக்கிறது. இதையும் மறுக்க வேண்டியது வரும். இதைப் போன்று திருக்குர்ஆனில் பல்வேறு வசனங்களை மறுக்க வேண்டியது வரும்.

நான் உறுதியாக கூறுகின்றேன். பிறகு அல்ஹம்துலிருந்து அன்னாஸ் வரை முழு குர்ஆனையும் விட வேண்டியது வரும். பிறகு சிந்தனை செய்து பாருங்கள். என்னை மறுப்பது சாதாரண விஷயமா? இதனை நான் என் தரப்பிலிருந்து கூறவில்லை. மாறாக இறைவன் மீது ஆணையிட்டுக் கூறுகின்றேன். உண்மை இதுவேயாகும். எவர் என்னை விடுவாரோ, எவர் என்னை மறுப்பாரோ அவர் தன்னுடைய வாயினால் செய்யவில்லை. மாறாக தனது அமல்கள் மூலமாக முழு குர்ஆனையும் மறுத்து விட்டார். மேலும் இறைவனை விட்டு விட்டார்.

**இதனைப் பற்றி எனது ஓர் இல்ஹாமில் வந்துள்ளது.**

*அன்த மின்னீ வஅனா மின்க - சந்தேகமின்றி என்னை மறுப்பது இறைவனை மறுப்பதாகும்.*

மேலும் என்னை ஏற்றுக் கொள்வதன் மூலம் இறைவனுடைய சான்றும், அவனது இருப்பின் மீது உறுதியான ஈமானும் உருவாகிறது. மேலும் என்னை மறுப்பது என்னை மறுப்பதாகாது. மாறாக ரஸூல் (ஸல்) அவர்களை மறுப்பதாகும். ஆனால் என்னை மற்றும் நிராகரிப்பதற்கு தைரியம் காட்டக்கூடியவர்கள் கொஞ்சம் தனது உள்ளத்தில் சிந்தனை செய்து பார்க்கட்டும். மேலும் அதனிடம் அவர் யாரை மறுக்கிறார் என்று ஃபத்வா கேட்கட்டும்.

**பிறகு ஒரு நூலில் அன்னார் கூறுகின்றார்:**

எனவே நீங்கள் நன்றாக நினைவில் கொள்ளுங்ள். நீங்கள் இந்த சண்டையில் உங்களையே வாளைக் கொண்டு வெட்டுகின்றீர்கள். எனவே உண்மை அறியாமல் நெருப்பில் கையைப் போடாதீர்கள். நெருப்பு கொளுந்து விட்டு எறிந்து கையை அழித்து விடும்.

உண்மையாக நம்புங்கள்; இந்த வேலை மனிதனுடையதாக இருந்தால், இதனை அழிப்பதற்கு மக்கள் தோன்றியிருப்பார்கள். மேலும் இது தனது வயது வரை ஒருபோதும் அடைந்திருக்காது. அவர் இறைவன் மீது இட்டுக்கட்டியவாறு என்னுடன் இறைவன் உரையாடுகின்றான் என்ற தனது இந்த வாதத்தில் திருப்தி கொண்ட ஒரு பொய்யர் உங்களது பார்வையில் வாழ்ந்திருக்கிறாரா?

அந்தோ நீங்கள் எதனையுமே சிந்திப்பதில்லை. திருக்குர்ஆனின் இந்த வசனங்களை மனனம் செய்வதில்லையோ இதில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களைப் பற்றி அல்லாஹ் கூறுகின்றான். நீர் என்னை ஒரு சிறிதளவு மறுத்தாலும் பிறகு நான் உன்னுடைய நாடி நரம்பை துண்டித்து விடுவேன். எனவே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட யார் இறைவனுக்கு அன்பிற்குரியவராக இருக்க முடியும். இவ்வளவு பெரிய பொய்யைக் கூறி தப்பித்து இருக்க முடியுமா? மாறாக இறைவனது அருளினால் நிரம்பி இருந்தாலும் சரி.

எனவே சகோதரர்களே! உள விருப்பத்திலிருந்து வெளியே வாருங்கள். மேலும் இறை அறிவுடன் தொடர்புள்ள சிறப்பான விஷயங்களில் எல்லை மீறியவாறு பிடிவாதம் செய்யாதீர்கள். வழக்கமான தொடர்பை உடைத்து புதிய மனிதனாக மாறி, தக்வாவின் பாதையில் அடியெடுத்து வையுங்கள். இதன் மூலம் உங்கள்

மீது கருணை ஏற்படட்டுமாக! இறைவன் உங்களுடைய பாவங்களை மன்னிப்பானாக! எனவே அச்சப்படுங்கள். தவிர்ந்து இருங்கள். உங்களில் நேர்வழி பெற்றவர் எவரும் இல்லையா?

நீங்கள் தவிர்ந்து இருக்கவில்லை என்றால், பிறகு அல்லாஹ் தனது சிறப்பிற்குரிய உதவிகளுடன் வருவான். தன்னுடைய அடியானுக்கு உதவி புரிவான். அவருடைய எதிரி அரைக்கப்படுவார்கள். அவருக்கு எந்த விதமான இழப்பையும் உங்களால் ஏற்படுத்த முடியாது. ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களுடைய எதிரிகளுக்கு அல்லாஹ் அறிவை வழங்குவானாக! மேலும் அவர்கள் இந்த தூதுச் செய்தியினை புரியக்கூடியவர்களாக ஆகட்டுமாக! அல்லாஹ் அஹ்மதிகள் அனைவரையும் அனைத்து விதமாத தீமைகளிலிருந்தும் பாதுகாப்பானாக! மேலும் நம்மை அதிக அளவும் அவன் பக்கம் குனியக்கூடிய மக்களாக ஆக்குவானாக! துஆவிற்கான வாய்ப்பினை வழங்குவாயாக.

தொழுகைகளுக்குப் பிறகு இன்றும் நான் ஒரு சில ஜனாஸா தொழுகை தொழ வைப்பேன். இதில் முதல் ஜனாஸா ஜக்கரி சாஹிப் பாரா ஜில்லா லைஸாவுடைய மனைவி மதிப்பிற்குரிய மர்யம் காத்கான் சாஹிபா ஆவார். இவர் 05.11.2011 ஆம் தேதி மரணமடைந்தார்கள். ஏறக்குறைய மாலை 5.00 மணி அளவில் அஹ்மதிய்யா ஜமாஅத் பாரா ஜில்லை லைஸாவில் சில அஹ்மதி அல்லாதவர்கள் ஓர் அஹ்மதி குடும்பத்தினர் மீது தாக்குதல் நடத்தினார்கள். இதன் விளைவாக இவர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் பெண் ஷஹீதாவார். இவரது வீடு முரப்பி சாஹிப் வீட்டை ஒட்டியுள்ளது. இதன் சுற்றுவட்டாரத்தில் மேலும் சில அஹ்மதிகளின் வீடுகளும் உள்ளன. சில வருடங்களுக்கு முன்பு எதிரிகளும் நம்மோடு சேர்ந்து நிலத்தை வாங்கினார்கள். சிலர் நீதித்துறையுடன் சேர்ந்து தில்லு முல்லு வேலை செய்து மர்ஹூமாவின் குடும்பத்தின் நிலமாற்றுப் பத்திரத்தை ரத்து செய்து விட்டனர்.

வழக்கு கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கிறது. ஆரம்பத்திலும் எதிரிகள் தாக்குதல் நடத்தினார்கள். ஆனால் அவர்களால் அபகரிக்க முடியாமல் போனது. சம்பவத்தன்று அந்தக் கூட்டம் நிலத்தை அபகரிக்க முயற்சி செய்தது. தடுத்தபோது செங்கல் கொண்டு தாக்கியதில் இவர்களுக்கு மிகவும் அதிகமான காயங்கள் ஏற்பட்டன. சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்கள். அஹ்மதிய்யத்தின் காரணமாக இந்த எதிர்ப்புகள் வந்தன. இவருடைய கணவருடைய இரண்டு சகோதரிகளும் காயம் அடைந்தனர். ஆனால் அவர்களது நிலைமை நன்றாக உள்ளது. மர்ஹூமாவுடைய வயது 25 அல்லது 26 வயது ஆகும். தொழில்ரீதியாக இது ஒரு விவசாயக் குடும்பமாகும். இவரது மாமானார் 1952-ல் இந்த இடத்தை வாங்கியபோது தமது நிலத்திலிருந்து அஹ்மதிய்யா ஜமாஅத்தின் பள்ளிவாசலுக்கு அருகில் ஒரு வாய்க்கால் ஒட்டிய பிளாட் ஜமாஅத்திற்காக அர்ப்பணித்தார்கள். தற்போது முரப்பி வீடு அதில் கட்டப்பட்டுள்ளது.

எதிரிகளின் கூட்டம் பல நாட்களாக அதனை அபகரிப்பதற்கு முயற்சி செய்து வந்தது. உயர்நீதிமன்றம் வரைக்கும் வழக்கு சென்றுள்ளது. உயர்நீதிமன்றத்திலும் இந்த வழக்கு தோல்வியடைந்தது. பிறகு ரிக்கார்டை மாற்றுவதற்கு முயற்சிகள் மேற்கொண்டனர். பாகிஸ்தானிலுள்ள வழக்கம்போல் அரசு அதிகாரிகளுடன் சேர்ந்து தில்லுமுல்லு செய்து ஏமாற்றி ரிக்கார்டை மாற்றி அமைத்தார்கள். இருந்தபோதிலும் வழக்கு நடைபெற்றுதான் வருகின்றது. இவர்களுக்கு மிகவும் அதிகமாக டென்-ன் ஏற்பட்டது. ஜமாஅத் டி.பி.ஒ. ரிப்போர்ட் செய்த போது டி.பி.ஒ மிகவும் தெளிவாக மறுத்து விட்டார். மேலும் எதிர் தரப்பினரை நான் பகைத்துக் கொள்ள முடியாது என்று பின்வாங்கி விட்டார். மர்யம் காத்துகன் சாஹிப் ஜனாஸாவை அருகில் உள்ள ஜமாஅத் ஷேர் கார்டு லைஸா மாவட்டத்தில் அடக்கம் செய்யப்பட்டது. கொலையாளி காவல்துறையின் உதவியுடன் தப்பி ஓடி விட்டார். இவர்களைப் பிரிந்து வருத்ததில் வாடுபவர்களில் கணவரைத் தவிர மூன்று சின்னச் சின்ன பிள்ளைகள் உள்ளனர். பெரிய பையனின் வயது 9 ஆகும். இரண்டாவது பெண் குழந்தை மாரியா பர்வீன் 6½ வயது. மூன்றாவது பையன் 5½ வயதாகும்.

இரண்டாவது ஜனாஸா மதிப்பிற்குரிய பகாதூதர் கான் சாஹிப் தர்வேஷ் காதியான் அவர்களின் மனைவி மதிப்பிற்குரிய அஸீமுன் நிஸார் சாஹிபா உடையதாகும். இவர் 03.12.2011 மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இவர் பீகார் மாநிலத்தின் முங்கேர் என்ற ஊரைச் சேர்ந்தவர் ஆவார். ஹஸ்ரத் மஸீஹ் மவ்ஊது (அலை) அவர்களின் சஹாபி ஆகிய மியான் ஷாதி கான் சாஹிப் அவர்களின் மருமகள் ஆவார். சிறு வயதிலிருந்தே காதியான் செல்ல விருப்பம் கொண்டிருந்தார்கள்.

அல்லாஹ் இவருடைய துஆவை ஏற்றுக் கொண்டான். திருமணத்திற்குப் பிறகு 1952-ல் காதியானுக்கு வந்தார்கள். உருது கவிதையின் ஒரு வரி இவ்வாறானதாகும்.

இறைவா! தாழ்மையான அஸீம் நிஸாவுடைய துஆ என்னவென்றால், காதியான் தாருல் அமான் என்ற ஊரை எனக்கு விரைவில் காண்பிப்பாயாக!

இவர் தனது கணவருடன் தர்வேஷுடைய காலத்தில் கஷ்டமான சூழ்நிலைகளிலும் முழுமையான நன்றியுணர்வுடனும் பற்றுணர்வுடனும் வாழ்வைக் கழித்தார்கள். கணவருடைய மரணத்திற்குப் பிறகு 29 வருட மிக நீண்ட காலத்தைப் பொறுமை மற்றும் நன்றியுணர்வுடன் கண்ணியமிக்க காதியான் மண்ணில் விதவையாக தனது வாழ்வை கழித்தார்கள். பிள்ளைகளுடைய தஃலீம், தர்பிய்யத் விஷயங்களில் மிகவும் அதிகமாக கவனம் செலுத்தி வந்தார். பிள்ளைகளுக்கு மிகவும் அதிகமாக கவனம் செலுத்தி வந்தார். பிள்ளைகளுக்கு மிகவும் அழகான முறையில் திருக்குர்ஆனைக் கற்றுக் கொடுத்தார்கள். இவருக்கு 5 மகள்களும் 5 மகன்களும் உள்ளனர். அல்லாஹ் மர்ஹூமாவுடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக!

மூன்றாவது ஜனாஸா இந்தோனேஷியாவைச் சேர்ந்த மதிப்பிற்குரிய சல்மான் அஹ்மது மர்ஹூம் உடையதாகும். இவர் 1.12.2011 -ல் மரணமடைந்தார்கள். இன்னா லில்லாஹி வஇன்னா இலைஹி ராஜிவூன். இருதய நோயின் காரணமாக மரணமடைந்தார்கள். 1953 -ல் பிறந்தார்கள். 1978 -ல் பைஅத் செய்தார்கள். 1979-ல் பாகிஸ்தானில் ஜாமிஆ அஹ்மதிய்யா ரப்வாவில் பஸ்லுல் காஸில் சேர்ந்தார்கள். ஜுலை 1985 -ல் முபஷ்ஷிர் தேர்வில் வெற்றி பெற்றார்கள். பிறகு மீண்டும் இந்தோனேஷியா வந்தார்கள். முதலில் லாஹூரில் தொண்டாற்றினார்கள். பிறகு 9 இடங்களில் இவருக்கு ஜமாஅத்திற்காக தொண்டாற்றுவதற்கான வாய்ப்பு கிடைத்தது. மரண சமயத்தின் போது ஜமாஅத் பண்டோவில் நியமிக்கப்பட்டிருந்தார்கள். இவருடைய மனைவியும் தவிர இவருக்கு மூன்று பிள்ளைகளும் உள்ளன. அல்லாஹ் இவர்களுக்கு ஆறுதல் வழங்குவானாக! மர்ஹூமுடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக!

நான்காவது ஜனாஸா அல்ஹாஜ் டி.எம். காலுன் சாஹிப் செரலியூனுடையதாகும். இவர் 26.11.2011 சிறிது நோய்வாய்ப்பட்ட பிறகு மரணமடைந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். இவர் வறுமையில் தான் பிறந்தார். நான் 15 வயது வரை செருப்பில்லாமல் நடந்தேன் எனக் கூறி வந்தார். ஆனால் அறிவின் மீது கொண்ட அன்பு வெற்றிகளை அவரது பாதத்தில் விழ வைத்தது. இளமையில் செரலியூன் புரொடியூஸ் மார்க்கெட்டிங் போர்டில் மேனேஜிங் டைரக்டராக நியமிக்கப்பட்டார். தானாகவே படித்து படிப்பறிவு பெற்றார். மிகவும் பரிவுடன் பழகக்கூடியவர்கள். நல்லொழுக்கம் கொண்டவர். பொருள் தியாகத்தில் அதிகமாக பங்கு கொள்ளக் கூடியவர். நல்ல இயல்பு கொண்ட மனிதர் ஆவார். இவருக்கு 2 மகள்களும் 4 மகன்களும் உள்ளனர். இவருடைய மனைவி ஹாஜியா சல்மா காஹிலுன் சாஹிபா செரலியூன் நேஷனல் சதர் லஜ்னாவாக தொண்டாற்றுவதற்கான வாய்ப்பினை அடைந்துள்ளார். இவருடைய ஒரு மகன் டோமி கால்வான் சாஹிப் இங்கு தான் இருக்கிறார். அவர் குத்தாமுல் அஹ்மதிய்யாவின் முன்னாள் சதர் ஆவார். அல்லாஹ் இவருடைய தர்ஜாவை மேம்படுத்துவானாக. இவருடைய நன்மையினை இவருடைய பிள்ளைகளிடம் தொடரச் செய்வானாக. இவர்கள் அனைவருடைய ஜனாஸா தொழுகை இஷா தொழுகைக்குப் பிறகு நடைபெறும்.

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**

**HADHRAT KHALIFATUL MASIH V**

**AT BAITUL FUTUH MOSQUE, LONDON**

**ON 09.12.2011**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ

Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA

ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456